


**28.05.2025**

<u>தலைப்பு செய்திகள்</u>

1. பொருளாதார விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவை கூட்டம், பிரதமர் திரு. நரேந்திரமோடி தலைமையில் இன்று புதுதில்லியில் நடைபெறுகிறது.

2. நுகர்வோர் பாதுகாப்பு செயல்திட்டங்கள் குறித்து மத்திய அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி இன்று புதுதில்லியில் ஆலோசனை மேற்கொள்கிறார்.

3. சென்னை நகர வளர்ச்சியில் மீனவ கிராமங்களின் பங்களிப்பு இன்றியமையாதது என்று முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

4. சென்னை அண்ணா பல்கலைக்கழக பாலியல் வன்கொடுமை வழக்கில் ஞானசேகரனை குற்றவாளியாக அறிவித்து சென்னை மகளிர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

5. நீலகிரி, கோவை, திருநெல்வேலி, தென்காசி, தேனி மாவட்டங்களில் இன்று மிக கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.

<u>இனி விரிவான செய்திகள்</u>

❖❖❖❖❖❖❖❖

<u>அமைச்சரவை கூட்டம்</u>

பிரதமர் திரு. நரேந்திரமோடி தலைமையில் மத்திய அமைச்சரவை கூட்டம் புதுதில்லியில் இன்று நடைபெறுகிறது.

பல்வேறு புதிய திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீட்டிற்கு ஒப்புதல், நாட்டின் பொருளாதார மேம்பாட்டுக் கொள்கை, பாதுகாப்பு சார்ந்த திட்டங்கள் குறித்து இதில் ஆலோசிக்கப்படுகிறது.

❖❖❖❖❖❖❖❖

<u>பிரதமர்</u>

இதனிடையே பிரதமர் சிக்கிம் மேற்குவங்கம், பீஹார், உத்தரபிரதேச மாநிலங்களில் பல்வேறு வளர்ச்சித்திட்டப் பணிகளை துவக்கி வைப்பதற்காக நாளை அங்கு செல்கிறார்.

முதல்கட்டமாக சிக்கிமில் பல்வேறு வளர்ச்சித் திட்டப்பணிகளை தொடங்கி வைக்கும் அவர், மேற்கு வங்கத்தில் புதிய நகர எரிவாயு விநியோக திட்டத்திற்கான அடிக்கல்லை நாட்டவுள்ளார்.

தொடர்ந்து பீஹார் தலைநகர் பாட்னாவில் விமான நிலைய புதிய முனைய கட்டடத்தை அவர் திறந்து வைக்கிறார்.

நாளைமறுநாள் பீஹார் மாநிலத்தில் 48 ஆயிரத்து 520 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளுக்கு அவர் அடிக்கல் நாட்டுகிறார்.

❖❖❖❖❖❖❖❖

சுப்ரிய சுலே

தீவிரவாதத்திற்கு எதிரான பூஜ்ஜிய சகிப்புத் தன்மை குறித்த இந்தியாவின் செய்தியை நம்நாட்டின் அனைத்துக் கட்சி குழுவினர் தொடர்ந்து எடுத்துரைத்து வருகின்றனர்.

பாகிஸ்தான் நாட்டின் எல்லை தாண்டிய தீவிரவாதம் குறித்து இக்குழுவினர் உலக நாடுகளிடையே எடுத்துரைக்கும் நிலையில் பனாமாவில் காங்கிரஸ் திரு. சசிதரூர் தலைமையிலான குழுவினர் இந்தியாவின் நிலைப்பாடை விளக்கினர்.

தென்னாப்பிரிக்காவில் தேசியவாத காங்கிரஸ் உறுப்பினர் திருமதி. சுப்ரியா சுலே தலைமையிலான குழு ஆபரேஷன் சிந்தூர் ராணுவ நடவடிக்கை, தீவிரவாதத்திற்கு தக்கபதிலடி கொடுக்கும் இந்தியாவின் நிலைப்பாடு ஆகியவற்றை எடுத்துரைத்தது.

இக்குழுவினர் இன்று கேப்டவுனில் அந்நாட்டின் பாராளுமன்ற உறுப்பினர்களை சந்தித்து இந்தியாவின் நிலைப்பாடு குறித்து எடுத்துரைக்கவுள்ளது.

இதனிடையே பி.ஜே.பி. நாடாளுமன்ற உறுப்பினர் திரு. பைஜெயந்த் பாண்டா தலைமையிலான குழுவினர் தங்களது குவைத் பயணத்தை முடித்துக்கொண்டு பஹ்ரைன் சென்றுள்ளனர்.

இதேபோல் கிரேக்க நாடு சென்றுள்ள திமுக உறுப்பினர் திருமதி. கனிமொழி தலைமையிலான குழுவினர் அந்நாட்டு உயரதிகாரிகளை சந்தித்து எல்லை தாண்டிய தீவிரவாதத்திற்கு எதிரான இந்தியாவின் நடவடிக்கை குறித்து எடுத்துரைத்தனர்.

❖❖❖❖❖❖❖❖

பிரல்ஹாத் ஜோஷி

நுகர்வோர் பாதுகாப்பு செயல்திட்டம் குறித்த உயர்நிலை ஆலோசனை கூட்டம் புதுதில்லியில் இன்று நடைபெறுகிறது.

மத்திய நுகர்வோர் விவகாரங்கள் உணவு மற்றும் பொது விநியோகத்துறை அமைச்சர் திரு.பிரல்ஹாத் ஜோஷி இதில் நுகர்வோருக்காக திட்டங்கள் செயல்முறைகள் குறித்து விளக்கமளிக்கவுள்ளார்.

❖❖❖❖❖❖❖❖

உயர்நீதிமன்றம்

சென்னை, ராஜஸ்தான், திரிபுரா, ஜார்கண்ட் மாநில உயர்நீதிமன்றங்களின் தலைமை நீதிபதிகளை பணியிட மாற்றம் செய்ய தலைமை நீதிபதி பி.ஆர். கவாய் தலைமையிலான உச்சநீதிமன்ற கொலீஜியம் பரிந்துரைத்துள்ளது.

இதன்படி ராஜஸ்தான் உயர்நீதிமன்ற நீதிபதி மணீந்திர மோகன் ஸ்ரீவத்சவா சென்னை உயர்நீதிமன்ற நீதிபதியாக பணியிடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

அதேபோல் சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி கே.ஆர், ஸ்ரீராம் ராஜஸ்தான் நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டுள்ளார்.

திரிபுரா உயர்நீதிமன்ற நீதிபதி தெலங்கானாவிற்கும்,

ஜார்கண்ட் நீதிபதி திரிபுரா நீதிமன்றத்திற்கும் பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

❖❖❖❖❖❖❖❖

<u>ஜோதிர் ஆதித்ய சிந்தியா</u>

மத்திய அமைச்சர் திரு. ஜோதிர் ஆதித்ய சிந்தியா வடகிழக்கு மாநிலங்களின் எழுச்சி குறித்து வெளியிட்ட கட்டுரையை பிரதமர் திரு. நரேந்திரமோடி தமது சமூக வலைதள பக்கத்தில் பகிர்ந்துள்ளார்.

கட்டமைப்பு மேம்பாடு, வர்த்தக வளர்ச்சி, சாலை கட்டமைப்பு போன்ற வசதிகளுடன் 30 டிரில்லியன் டாலர் வளர்ச்சி இலக்கை நோக்கி வடகிழக்கு மாநிலங்கள் பயணிப்பதாக திரு, ஜோதிர் ஆதித்யா தெரிவித்திருப்பதன் மூலம், வடகிழக்கு இந்தியா நாட்டின் முன்னோடி பிராந்தியமாக முன்னேறி வருவதாக பிரதமர் மகிழ்ச்சி தெரிவித்தார்.

❖❖❖❖❖❖❖❖

<u>விக்ரம் மிஸ்ரி</u>

மத்திய வெளியுறவுத்துறை செயலாளர் திரு. விக்ரம் மிஸ்ரி, அமெரிக்காவின் பாதுகாப்பு செயலர் ஜெ.ஃப்ரி கெஸ்லருடன் நவீன தொழில்நுட்ப துறையில் ஒத்துழைப்பு குறித்து விரிவாக ஆலோசனை மேற்கொண்டார்.

அரசுமுறை பயணமாக அமெரிக்கா சென்றுள்ள திரு. மிஸ்ரி இந்திய - அமெரிக்க வர்த்தக பேச்சுவார்த்தைகளை மேலும் வலுப்படுத்தி வர்த்தக ஒருங்கிணைப்பை மேம்படுத்துவதற்கான பேச்சுவார்த்தைகளை மேற்கொள்கிறார்.

❖❖❖❖❖❖❖❖

<u>திமுக வேட்பாளர்கள்</u>

தமிழ்நாட்டில் காலியாகவுள்ள 6 மாநிலங்களவை பதவியிடங்களுக்கு அடுத்தமாதம் 19-ம் தேதி தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், திமுக வேட்பாளர்களின் பெயர்கள் அறிவிக்கப்பட்டுள்ளன

திமுக போட்டியிடும் 4 இடங்களில் கட்சியின் சார்பில் பி.வில்சன், எஸ்.ஆர். சிவலிங்கம், கவிஞர் சல்மா ஆகிய மூவரும் போட்டியிடுவார்கள் என்று கட்சி தலைவரும், முதலமைச்சருமான திரு. மு.க. ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

எஞ்சியுள்ள ஒரு இடம் மக்கள் நீதிமய்யத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

இதனையடுத்து மக்கள் நீதிமய்ய கட்சியின் தலைவரும், திரைப்பட நடிகருமான திரு. கமலஹாசன் மாநிலங்களவை உறுப்பினராக போட்டியிடுவார் என்று அக்கட்சி அறிவித்துள்ளது.

❖❖❖❖❖❖❖❖

<u>முதலமைச்சர்</u>

சென்னை நகர வளர்ச்சியில் மீனவ கிராமங்களின் பங்களிப்பு இன்றியமையாதது என்று முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னை திருவொற்றியூரில் மீனவர் நலத்துறை சார்பில் 273 கோடி ரூபாய் மதிப்பிலான புதிய சூரை மீன்பிடி துறைமுகத்தை இன்று திறந்துவைத்து பேசியஅவர், மீனவர் நலன் மற்றும் வாழ்வாதாரத்தை பாதுகாக்க மாநில அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக பட்டியலிட்டார்.

.. வாய்ஸ் ..

மேம்படுத்தப்பட்ட மீன்பிடி துறைமுகங்கள், மீன் இறங்கு தளங்கள், மீன்விதை பண்ணை, உள்ளிட்ட 13 முடிவுற்ற திட்டப் பணிகளையும் துவக்கி வைத்தார்.

மேலும் ராமநாதபுரம் மாவட்டம் தங்கச்சி மடம், ரோச்மா நகர் மீனவ கிராமங்களில் 170 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மீன் இறங்குதளங்களை மேம்படுத்தும் பணிகளுக்கும் அவர் அடிக்கல் நாட்டினார்.

❖❖❖❖❖❖❖❖

<u>மகளிர் நீதிமன்றம்</u>

சென்னை அண்ணா பல்கலைக்கழக மாணவி பாலியல் வன்கொடுமை வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட ஞானசேகரன் குற்றவாளி என சென்னை மகளிர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

தண்டனை விவரங்கள் வரும் 2-ம் தேதி அறிவிக்கப்படும் என்று நீதிபதி ராஜலெட்சுமி தமது தீர்ப்பில் தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழக வளாகத்தில் கடந்த டிசம்பர் மாதம் நடைபெற்றதாக கூறப்பட்ட இச்சம்பவத்தில் ஞானசேகரன் மீது சுமத்தப்பட்ட 11 குற்றச்சாட்டுகளும் நிரூபனமாகி இருப்பதாக நீதிபதி குறிப்பிட்டுள்ளார்.

இவ்வழக்கு அரிதான வழக்கு என்பதால் குற்றவாளிக்கு அதிகபட்ச தண்டனை வழங்கப்பட வேண்டுமென்று அரசு தரப்பில் வாதிடப்பட்டது.

❖❖❖❖❖❖❖❖

<u>கனமழை</u>

மேற்குதொடர்ச்சி மலை பகுதிகளில் பெய்து வரும் தொடர் கனமழை காரணமாக 140 அடி கொள்ளளவு கொண்ட பாபநாசம் அணையின் நீர்மட்டம் 103 அடியை எட்டியுள்ளது.

156 அடி கொள்ளளவு கொண்ட சேர்வலாறு அணையின் நீர்மட்டம் ஒரே நாளில் 17 அடி உயர்ந்து 135 அடியாக அதிகரித்துள்ளது.

மணிமுத்தாறு அருவியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதால் சுற்றுலா பயணிகளுக்கு 3-வது நாளாக வனத்துறை தடைவிதித்துள்ளது.

சுற்றுலா பயணிகள் களக்காடு, தலையணை, திருக்குறுங்குடி, நம்பிக்கோவில் பகுதிகளுக்கு செல்லவும் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

தொடர்மழை காரணமாக குற்றால அருவிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதால், சுற்றுலா பயணிகள் குளிக்க 4-வது நாளாக இன்றும் தடை நீட்டிக்கப் பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார். .. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖

<u>நீலகிரி</u>

நீலகிரி மாவட்டத்தில் கனமழை குறைந்ததை அடுத்து சுற்றுலா பணிகள் சுற்றுலா தலங்களுக்கு செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து உதகை தாவரவியல் பூங்கா, ரோஜா பூங்கா ஆகியவை இன்று திறக்கப்பட்டதை அடுத்து சுற்றுலா பயணிகள் ஆர்வத்துடன் இதனை பார்வையிட்டு வருகின்றனர்.

❖❖❖❖❖❖❖❖

## குழந்தை வளர்ச்சிப்பணிகள்

காஞ்சிபுரம் மாவட்டத்தில் நடப்பாண்டில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப்பணிகள் திட்டத்தின் மூலம் 2 முதல் 5 வயதிற்கு உட்பட்ட குழந்தைகளை, பெற்றோர்கள் குழந்தை மையங்களில் சேர்த்து பயன்பெறலாம் என்று ஆட்சித்தலைவர் திருமதி. கலைச்செல்வி மோகன் தெரிவித்துள்ளார்.

மாவட்டத்தில் செயல்படும் 940 குழந்தை மையங்களில் செய்கை பாடல், கதை, விளையாட்டு கல்வி, உபகரணங்கள் ஆகியவற்றின் மூலம் முறைசாரா முன்பருவ கல்விமுறை பயிற்றுவிக்கப்படுவதாக கூறினார்.

❖❖❖❖❖❖❖❖

## இருவரி

திருப்பூர் குடிமங்கலம் வட்டாரத்தில் கொங்கல்நகரம் கிராமத்தில் உழவரை தேடி வேளாண்மை எனும் திட்டத்தின் கீழ், அனைத்து துறைகளின் வட்டார அலுவலர்கள் பங்கேற்கும் கூட்டம் நாளை நடைபெறும் என்று மாவட்ட வேளாண்துறை தெரிவித்துள்ளது.

புதுக்கோட்டை மாவட்டம், கடையக்குடி கிராம ஊராட்சியில் பெரியார் நினைவு சமத்துவபுரத்தில், புதிய வீடுகளுக்கு பயனாளிகள் தேர்வு செய்யப்படவுள்ளதால் அடுத்தமாதம் 10-ம் தேதிக்குள் விருப்பமுடையவர்கள் விண்ணப்பிக்கலாம் என்று மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. அருணா தெரிவித்துள்ளார்.

அரியலூர் மாவட்ட வட்டாட்சியர் அலுவலகத்தில் எரிவாயு நுகர்வோர் குறைதீர் கூட்டம் நாளை மாவட்ட வருவாய் அலுவலர் தலைமையில் நடைபெறும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. ரத்தினசாமி தெரிவித்துள்ளார்.

❖❖❖❖❖❖❖❖

## கோவில்

நாகை மாவட்டம் ராமர் மடத்தில் அமைந்துள்ள ஸ்ரீ பாலஆஞ்சநேயர் ஆலய வைகாசி திருவிழாவை முன்னிட்டு பக்தர்கள் ஆஞ்சநேயருக்கு பாலாபிஷேகம் செய்தனர்.

இதனைத் தொடர்ந்து மகா தீபாராதனையும் இன்று இடம்பெற்றது. ஏராளமான பக்தர்கள் இதில் கலந்து கொண்டனர்.

❖❖❖❖❖❖❖❖

## வானிலை

வடமேற்கு வங்க கடல் பகுதியில் நிலவிய காற்றழுத்த தாழ்வு பகுதி இன்று ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதியாக வலுப்பெற்று அதே இடத்தில் நீடிப்பதாக சென்னை வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.

இது வடதிசையில் நகர்ந்து வடக்கு வங்க கடல் பகுதிகளில் அடுத்த 24 மணிநேரத்தில் காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுவடையக்கூடும் என்று இம்மையம் கூறியுள்ளது.

இதனிடையே வளிமண்டல மேலடுக்கு சுழற்சி காரணமாக நீலகிரி, கோவை, திருநெல்வேலி மாவட்ட மலைப்பகுதிகள்,

தென்காசி, தேனி மாவட்டங்களில் இன்று கன முதல் மிக கனமழையும்,

திருப்பூர், திண்டுக்கல் கன்னியாகுமரி மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் கனமழையும் பெய்யக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழக கட்லோரம், மன்னார் வளைகுடா, குமரிக்கடல், வங்க கடல், அரபிக்கடல் பகுதிகளில் பலத்த சூறாவளி காற்று வீசக்கூடும் என்பதால் வரும் ஒன்றாம் தேதிவரை இதற்குட்பட்ட பகுதிகளுக்கு மீனவர்கள் செல்லவேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

❖❖❖❖❖❖❖❖

<u>டென்னிஸ்</u>

பிரென்ஞ் ஓப்பன் டென்னிஸ் போட்டியின் ஆடவர் இரட்டையர் முதல் சுற்றில் இந்தியாவின் போலிப்பள்ளி, கொலம்பியாவின் நிக்கோலஸ் இணை - கனடாவின் கேப்ரியேல், பிரிட்டனின் ஜாக்கப் இணையை இன்று எதிர்கொள்கிறது.

❖❖❖❖❖❖❖❖

<u>கிரிக்கெட்</u>

ஐ.பி.எல். 20-20 கிரிக்கெட் போட்டியில் சண்டிகரில் நாளை தொடங்கவுள்ள முதலாவது தகுதிச்சுற்று ஆட்டத்தில் பஞ்சாப் கிங்ஸ் - ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூருவை எதிர்கொள்கிறது.

❖❖❖❖❖❖❖❖

<u>பேட்மிட்டன்</u>

சிங்கப்பூர் ஓப்பன் பேட்மிட்டன் போட்டியில் ஆடவர் ஒற்றையர் முதல்சுற்றில் இந்தியாவின் லக்ஷயா சென் காயம் காரணமாக விலகியதை அடுத்து தைவானின் சுன் இ லின் அடுத்த சுற்றுக்கு முன்னேறினார்.

❖❖❖❖❖❖❖❖